*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385 (Print)
*Volume 2, Issue 2, April - June 2015* ISSN 2394-6393 (Online)

# ஒப்பீட்டு நோக்கில் மெய்ப்பாட்டியல்

Dr. G. Palani

*Assistant Professor, Department of Tamil Literature*
*University of Madras, Chennai – 600 005.*
*elaezhini@gmail.com*

மெய்ப்பாட்டியல் செய்யுள் உறுப்புக்களில் ஒன்று என்பதால், அதன் இலக்கணத்தை செய்யுளியலில் கூறி, அதன் வகை, அது பயின்று வரும் முறை, அதன் பொருள் ஆகியவற்றை மெய்ப்பாட்டியலில் விளக்குகிறார் தொல்காப்பியர். அதாவது,

உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின் மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும் (தொல். செய். 196)

ஆராய்ந்து கண்டுகொள்ளத் தேவையில்லாது காண்பவர்கள் எளிதில் அந்த உணர்வைப் பெற உடலில் தோன்றுவது மெய்ப்பாடு.

உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல் மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே (செயிற்றியம்)

இதையே **கூத்த நூல்**,

அகம் அது உண்மை : அது பாய்ந்து உள்ளே நிறைவது சுவை ஆம் : சுவையது நிரம்பி மெய்வழி வழிதல் மெய்ப்பாடு ஆமே (சூத் . 13). மேலும்;

மெய்ந்நிலை என்பது மெய்ப்பாடு ஆமே (சூத். 123) என்கிறது.

**தண்டியலங்காரம்**,

உண்ணிகழ் தனிமை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாடின் இயல்வது சுவையே

என்கிறது. பரிதிமாற் கலைஞர் அவர்கள் தனது **நாடகவியல்** நூலில், மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றமு முய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின் மெய்ப்பொரு ணேரிற் கண்டது போலத் தோன்றுங் கருத்துஞ் சொற்றமெய்ப் பாடாம் என்கிறார். ஓர் உணர்வை, காண்பவர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் நிகழ்த்துநர் தன் உடலின் வழி வெளிப்படுத்துகின்ற சுவை, மெய்ப்பாடு ஆகிறது.

இதையே **பாவரரேறு ச. பாலசுந்தரம்** அவர்கள், "கதை தழுவி வரும் நாடகக் கூத்தின்கண் கதைமாந்தராக வேடம் பூண்ட பொருநர், தம் நடிப்பானும் உரையானும் புலப்படுத்தும் உணர்வுகள் சுவை (ரசம்) என்னும் நாடகத் தமிழின் உறுப்பாகும். நாட்டியக் கூத்தின் கண் விறலி தன் அவினயத்தாள் (அபிநயம்) புலப்படுத்தும் உணர்வுகள் மெய்ப்பாடாகும். ஈண்டு மெய்ப்பாடென்பது மெய்யின் கண் தோன்றுவது என்றும் பொருள்பட நின்றது.

நாடக உறுப்பாகிய சுவை, காண்போரின் அறிவொடு கலந்து அவரை அவ்வுணர்வினராகவே ஆக்கிவிடும். நாட்டிய உறுப்பாகிய மெய்ப்பாடு காண்போரின் அறிவினைச் சார்ந்து அவ்வுணர்வினைப் புலப்படுத்தி நிற்கும். அஃதாவது, நாடகத்துள் நிகழும் அழுகைக் காட்சியைக் காண்போர் தாமும் அழுவர்: நாட்டிய மகள் அவினயித்துக் காட்டும் அழுகையைக் காண்போர் அறிந்துகொள்வதின்றி அழுவலைச் செய்யார்.

அதனான் நாடக உணர்வுகள் சுவையென்றும் நாட்டிய உணர்வுகள் மெய்ப்பாடென்றும் தொன்னூலாசிரியன்மார் வேறுபடுத்தினர் என்கிறார் (தொல். பொருள். உரை., 227, 228).

**மெய்ப்பாட்டின் வகைகள்:**

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப (தொல். மெய். 3)

**தொல்காப்பியர்**

1. நகை
2. அழுகை (அவலம்)
3. இளிவரல் (இளிப்பு, அருவருப்பு)

4. மருட்கை (வியப்பு, அற்புதம்)
5. அச்சம் (பயம்)
6. பெருமிதம்
7. வெகுளி (பெருஞ்சினம்)
8. உவகை (இன்பம், காமம்)



**அடியார்க்குநல்லார்**

1. வீரம்
2. பயம் (அச்சம்)
3. இழிப்பு (இளிவரல்)
4. அற்புதம்
5. இன்பம்
6. அவலம்
7. நகை
8. நடுவுநிலை
9. உருத்திரம்

**பரதநாட்டிய சாஸ்திரம்**

1. ச்ருங்காரம் (உவகை)
2. பயானகம் (அச்சம்)
3. ஹாஸ்யம் (நகை)
4. கருணம் (சோகம்)
5. அற்புதம் (வியப்பு)
6. ரௌத்ரம் (பெருஞ்சினம், வெகுளி)
7. வீரம்
8. பீபத்ஸம் (இழிப்பு, அருவருப்பு)
9. சாந்தம் (அமைதி, பொறுமை)

**தண்டியலங்காரம்**

1. வீரம்
2. அச்சம்
3. இழிப்பு (இளிவரல்)
4. வியப்பு
5. காமம் (இன்பம்)
6. அவலம்
7. உருத்திரம் (பெருஞ்சினம், வெகுளி)
8. நகை

**நாடகவியல்**

1. உவகை
2. பெருமிதம்
3. நகை
4. சமநிலை
5. வெகுளி
6. வியப்பு
7. இழிப்பு (அருவருப்பு)
8. அவலம் (அழுகை)
9. அச்சம்

தொல்காப்பியம், மெய்ப்பாடுகளை எண்வகை என்றும் அவை சூழலுக்கேற்ப முப்பத்திரண்டாக விரிவடையும் என்றும் கூறுகிறது. இனி தொல்காப்பிய மெய்ப்பாடுகளை அடியொற்றி ஒப்பிட்டுக் காணலாம்.



**நகை:**

எள்ளல் இளமை பேதைமை மடனென்று உள்ளப் பட்ட நகைநான் கென்ப (4) செயிற்றியம் - 21 வகைகளில் நகை தோன்றும் என்கிறது. அதாவது;

உடனிவை தோன்றும்ட இடமியா தெனினே
முடவர் செல்லும் செலவின் கண்ணும்
மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணும்
---------------------------------------------
---------------------------------------------
ஊமைக் கண்ணுஞ் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபின் இன்னுழி எல்லாந்
தோன்றும் என்ப துணிந்திசி னோரே

என்கிறது.

**தண்டியலங்காரம்**

நாண்போலுந் தன்மனைக்குத் தான்சேற லிந்நின்ற

**அடியார்க்கு நல்லார்**

நகையின் அவிநய நாட்டுங்காலை
மிகைபடு நகையது பிறர்நகை புடையது,
கோட்டிய முகத்தது..............................
விட்டுமுரி புருவமொடு விலாவிறுப்புடையது
செய்வது பிறிதாய் வேறு சேதிப்பதென்
றையமில் புலவர் ஆய்ந்தனர் என்ப (பக். 84) -

**விளக்கம் வேண்டும்**

**நாடகவியல் - நகையவிநயம் என்கிற பகுதியில்**

நகைச்சுவை அவிநய நவலுமிடத்து
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது

என்கிற அடியார்க்கு நல்லார் மேற்கோள் பாடலை வழங்கியுள்ளார்.



குறிப்பாக,

எள்ளல் - 1. பிறரை கேலி - கிண்டல் செய்து நகைப்பது

2. பிறரால் தான் எள்ளப்பட்டதால் தான் நகைப்பது.

இளமை - 1. தன் இளமை கண்டு நகைப்பது
2. பிறர் இளமை கண்டு நகைப்பது

பேதைமை - 1. தன் பேதைமை 2. பிறர் பேதைமை

மடமை (அறியாமை) - 1. தன் மடமை 2. பிறர் மடமை

- இந்நான்கு அல்லாது உள்ளத்தில் தோன்றாத பொய்யான நகையும் உண்டு என்கிறார் **பேராசிரியர்**.

**- வீரசோழிய உரை மேற்கோள் -** மயக்கம், பெயர்ப்பு, இகழ்வு, நோக்கம் என்கிற நான்கையும் நகைக்குறிப்பாக,

மயக்கம் - பேதமை

பெயர்ப்பு - நிகழ்ச்சியை மாற்றிப் புரிந்துகொள்ளும் மடமை

இகழ்வு - எள்ளல்

நோக்கம் - நோக்குவதற்கு இனிய இளமை என்பதாக விவரிக்கின்றது.

**அழுகை**

இழிவே இழவே அசைவே வறுமைஎன
விளிவில் கொள்கை அழுகை நான்கே (தொல். மெய். 5)

- இளிவு - இழிவு 1. தன்னைப் பிறர் இகழ்வதாலும்- எளியோனாக எண்ணுவதாலும்
2. ஒருவர் மற்றவரால் இகழப்பட்டதைத் தான் கண்டதாலும் வருந்துதல்- இழவு – 1.அரிய பொருளைத் தான் இழந்ததனால் (தாய், தந்தை, சுற்றம்)
2. பிறர் இழந்ததால் தான் வருந்துதல்

- அசைவு - 1. தன்னிலையால் தாழ்ந்த தளர்ச்சியால்,
2. பிறர் தளர்ச்சி கண்டு தான் வருந்துதல்

- வறுமை – 1. தான் விரும்பும் பொருளை பெறுவதற்கில்லா - தன்னுடைய ஏழ்மையை நினைத்து,
2. பிறர் வறுமை கண்டு தான் வருந்துதல்

இவை மட்டுமல்லாது, **வீரம் பற்றி உவகைக் கண்ணீர் வடித்தலும் அழுகையின் பாற்படும்** என்கிறார் பேராசிரியர்.

**செயிற்றியம்**

கவலை கூர்ந்த கருணையது பெயரே
அவலமென்ப அறிந்தோர் அதுதான்
நிலைமை யிழந்து நீங்குதுணை யுடைமை
தலைமை சான்ற தன்னிலை யழிதல்
---------------------------------------------
---------------------------------------------

இன்னோர் அன்னவை இயற்பட நாடித்
துன்னினர் உணர்க துணிவறிந் தோரே
“இதன் பய இவ்வழி நோக்கி
அசைந்தனர் ஆகி அமுத வென்ப”

என்கிறது.

**அடியார்க்கு நல்லார்;**

அவலத் தவிநய மறிவரக் கிளம்பிற்
கவலையொரு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய
-----------------------------------

என்று அவலச்சுவைக்கு சான்று காட்டுகிறார்.

- **வருத்தம், இகழ்வு, வலியின்மை, வறுமை** என்ற நான்கினையும் இரக்கத்திற்குரிய குறிப்புகளாக **வீரசோழியம் உரைமேற்கோள்** காட்டுகிறது.

**பரிதிமாற் கலைஞர்** தனது நாடகவியலில் அடியார்க்கு நல்லார் எடுத்தாளும் மேற்கோள் பாடலை அழுகை மெய்ப்பாட்டிற்கு எடுத்தாண்டுள்ளார் (189).

**இளிவரல்** (அருவருப்படைதல்)

மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே (6)

**அடியார்க்கு நல்லார்**

இழிப்பி னவிநய மியம்புங் காலை
இடுங்கிய கண்ணு பெயிறுபுறம் போதலும்
ஒடுங்கிய முகமு முளுற்றாக் காலும்
சோர்ந்த யாக்கையுஞ் கொன்னிரம் பாமையும்
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே...

என்றும்

**தண்டியலங்காரம்**

உடைதலையு மூளையு மூன்றடியு மென்பும்
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப - மிடைபேய்
பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்இந்த மேற்கோள் பாடலும் நாடகவியலில் பரிதிமாற் கலைஞரால் இளிவரல் மெய்ப்பாட்டிற்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

- **மூப்பு** - முதுமை - தான் மூப்பு பற்றி, பிறர் மூப்பு பற்றி

- **பிணி** - நீங்காத பசி, நிறைவேறா காமம், வருத்தம் ஏற்படுத்துகின்ற நோய் போன்றவற்றால் ஏற்படும் அருவருப்பு. இது தனக்கும் பிறர்க்கும் ஏற்படுதல் பொருட்டாக தோன்றும்.

**வருத்தம்** - துன்பம் - தனக்கு ஏற்படும் துன்பம் பற்றியும் பிறர்க்கு ஏற்படும் துன்பம் கண்டும் இளிவரல் அடைதல்

**மென்மை** - வலிகுன்றியிருத்தல் - (பேராசிரியர்) இகழ்ச்சிக்கு ஆளாக்கும் எளிமை - தான் சார்ந்தும் பிறர் சார்ந்தும்

“கூச்சத்தால் சுருங்கி நெருங்கிய கண்களுடைமையும், பற்கள் வெளியே தெரிதலும், முகம் கூம்பி வேறுபடலும், கை கால்கள் செயலற்றுப் போதலும், உடற் சோர்பும் உரை குழறுதலும் இவை போன்ற பிறவும் இழிப்பிற்கான அவிநயங்கள்” என்று நாடகவியல் கூறுகிறது (249).

“உயிர்வாழ ஒல்லாமல் மானம் குன்ற வரும் இழிநிலையே இளிவரல்” என்று தம் உரையில் சோமசுந்தர பாரதியார் குறிப்பிடுகிறார் (மெய். 6).

“இளிவரலானது நாற்றம், சுவை, தோற்றம், ஊறு என்ற நான்கு குறிப்புப் பற்றி வரும்” என்கிறது வீரசோழிய உரை (காரிகை. 96)

**மருட்கை** (வியப்பு, அற்புதம்)

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே (7)

**அடியார்க்கு நல்லார்,**

அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற் சொற்சோர் புடையது சோர்ந்த கையது மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய தெய்திய திமைத்தலும் விழித்தலு மிகவாதென்றையமில் புலவ ரறைந்தன ரென்ப...

**தண்டியலங்காரம்,**

முத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிரும் –
கொத்தினதாம் பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா
விரிநாடன் தன்னேர் பொழியுந் தரு

**கூத்த நூல்,**

வியப்பவி நயமே விளம்புங் காலை
ஆவென வாயும் அகலமா விழியும்
சோர்ந்த கையும் சொற்றி கைப்பூறும்
மெய்ம்மயிர் புளரும் மேவுத லென்ப (சூத். 789)

கூத்தநூலில் இடம் பெற்றுள்ள இந்நூற்பா அவ்வாறே நாடகவியலில் எடுத்தாளப் பட்டுள்ளது.

**புதுமை** - ஏதாவது எவ்விடத்திலாவது எப்போதாவது பொருள் தோன்றியவழி வியத்தல். அதுவரையில் காணாததைக் காண்பது, நிகழாதது நிகழ்தலும்

“கங்காரு, பறக்கும் மீன், சிற்றுயிர்களைப் பிசைந்து தின்னும் பூச்செடி, கையில் அடங்கும் சிறுநாய், கண் கொள்ளாப் பெருமலை, இரு தலை, முக்கண், ஐங்கால், அறுவிரல் முதலிய வழக்கில் இல்லாத உறுப்புடைய உயிர்கள் போல்வன காண எழும் உணர்வு புதுமையின் பிறக்கும் வியப்பாகும்” என்கிறார் சோமசுந்தர பாரதி (மெய். 7).

**பெருமை** - முன்பு கண்ட பொருட்கள் தன் நிலையை மீறி பெருத்திருத்தலைக் கண்டு வியத்தல். - “அவை மலையும் யானையும் செல்வமும் முன்பு கண்ட அளவில் மிக்கன கண்டவழி வியப்பு வரும்” என்கிறார் இளம்பூரணர். (தொல். பொருள். 251).

**சிறுமை** - சிறுத்தல் - “கடுகின்பண் பல துளை போலும் மிகவும் நுண்ணியன கண்டு வியத்தல்” (மேலது).

“தலைவியின் இடையினைக் கண்ட தலைவன் அது மிகவும் நுண்ணியதாயுள்ளது என்று கருதுவது பிறன்கண் தோன்றிய சிறுமை பற்றிய வியப்பு” என்கிறார் பேராசிரியர்.

**ஆக்கம்** - ஒன்றன் வளர்ச்சி மாற்றம் கண்டு வியத்தல்

1. சிறியோன் பெரிய செயல் செய்தல்
2. பெரியோன் சிறிய செயல் செய்தல்
3. ஒன்று ஒன்றாய்த் திரிதல்

“நன்னிலம் சார்பாகத் தோன்றும் மரம் முதலாயின தம் அளவில் மீறி வளர்ந்த வழி வியத்தலும் யாதொன்றும் இல்லாத வறியவன் செல்வனாயவழி அதற்குக் காரணம் உணராதான் வியத்தலும், இளையான் வீரம் கண்டு வியத்தலும் உலகியலில் வியக்கத்தகுவன கண்டு வியத்தலும்”

“ஆக்க மருட்கை செயற்கையில் தோன்றும் அரும்பொருள்கள் விளைவிக்கும் வியப்பாகும். வானஊர்தி, பேசும்படம், வானொலி போல்வன ஆக்க மருட்கை” என்கிறார் சோமசுந்தர பாரதி.

**அச்சம்**

அணங்கே விலங்கே கள்வர்தம்
இறையெனப்பிணங்கல் சாலா அச்சம் நான்கே (8)

**அடியார்க்கு நல்லார்,**

அச்ச வவிநயம் விளம்புங்காலை, முரிந்த புருவமுஞ் சிவந்த
கண்ணும் பிடித்த வாளுங் கடித்த வெயிறும், மடித்த....

**தண்டியலங்காரம்**

கைநெரித்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய் புலர்ந்தாள் – தையல்
சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்புனவேடி
மேல்வந்த போது”



**கூத்த நூல்**

அச்சத் தவிநய மாயுங் காலை
ஒடுங்கிய உடலும் நடுங்கிய நிலையும்
மலங்கிய கண்ணும் கலங்கிய விழியும்
காந்து செய்தலும் கைம்மறுத் திடலும்
பரநீத நோக்கமாம் பண்பிற் றென்ப (சூத். 793)

மேற்சுட்டிய கூத்த நூல் நூற்பா அச்சமெய்ப் பாட்டிற்கு நாடகவியலில் எடுத்தாளப் படுகிறது.

**அணங்கு -** பேயும் பூதமும் பாம்பும் பதினெண் தேவ கணங்களும் நரகத்துத் தலைவர்களும் துன்புறுத்தும் பிணந் தின்னும் பெண்டிர் முதலாயினோரும் இடியோசை முதலியனவும்

“யானை தாக்கவரினும் பாம்பு தம்மை நோக்கி வரினும் வானத்தே இடி, இரவில் அமைதியதன நேரத்தே இடிக்கத் தொடங்கனும் கருக்கொண்ட மகளிர் நடுங்குதல், அணங்கு பொருளான அச்சத்தினாலேயாம்” என்கிறார் பேராசிரியர் (தொல். மெய். 8).

**விலங்கு -** அரிமா முதலிய அஞ்சத்தக்கன கண்ட அச்சம் (பேராசிரியர்)

“தினைக்கொல்லை காக்கும்போது மயக்கம் பொருந்திய யானை தலைவியைத் தாக்க வந்தவிடத்தே, அவளுக்கு விலங்கு பொருளாக அச்சம் பிறந்தது” என்று குறிஞ்சிப்பாட்டு (165-169) உரையில் இளம்பூரணர் குறிப்பிடுகிறார்.

**கள்வர் -** கொலை, களவு, காமம், கள், பொய் சொல்வோர் போன்றோர் அரசனுக்கு அஞ்சுதல். அவர்களைக் கண்டு பிறர் அஞ்சுதல்

**தம்இறை -** “இறையெனப்படுவார் தந்தையும் ஆசிரியரும் அரசரும் முதலாயினர்” என்கிறார் பேராசிரியர்.

அதாவது, “அரசன் தம்மை நிமிர்ந்து பார்க்கும் பார்வைக்கு அஞ்சிக் குறுநில மன்னர்கள் அவனுடைய திருவடிகளையே நோக்கி இருக்கின்றனர்” என்பது தம்இறை பொருளாகிய அச்சம் என்கிறார்.

“தம்இறை என்பது இரட்டுற மொழிதலால் (தம் இறை) அரசனையும் வழிபடு தெய்வத்தையும் (தம்மிறை) தாம் புரிந்த தீவினைக் குற்றத்தையும் குறித்து நின்றது. எனவே, இவ்விருவகை பற்றியும் அச்சம் பிறக்குமென்பதாயிற்று” என்கிறார் பாவலரேறு ச. பாலசுந்தரம் (தொல். மெய். 8).

நகை முதல் உள்ள மெய்ப்பாடுகள் இருபாலும் வெளிப்படுவது போல் அல்லாமல் அச்சம் பிறபொருள் பற்றியே வரும் என்பதால்தான் “பிணங்பல் சாலா அச்சம்” என்றார் எனப் பேராசிரியர் குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

**பெருமிதம்**

கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே (9)

பெருமிதமாவது - தன்னைப் பெரியனாக நினைத்தல் - மகிழ்ச்சி

**பெருமிதம் என்னும் சுவை பிற நூல்களில் காட்டப்படவில்லை என்பது நினக்கத்தக்கது.**

**கல்வி -** கல்வியில் வல்ல சான்றோர் முன் அரிய செய்திகளை எடுத்துக் கூறுதலில் வல்லேன் யான் (கலி. 141) என்று கூறுவது கல்வி பற்றிய பெருமிதம் என்கிறார் பேராசிரியர் (தொல். பொரு. 257).

“கல்வியாவது: அறமுதலாய மும்முதற் பொருள் பற்றிய நூலறியும் இசை, நாடகம், சிற்பம் முதலிய கலையறியும் படைக்கலக் கல்வியும் பிறவுமாம்” என்கிறார் பாவலரேறு (தொல். மெய். 9).



**தறுகண் -** அஞ்சாமை - வீரம் அதாவது பகைக்கும் பகை செய்யும் பொருட்கும் அஞ்சாத மனத்தின்மை - வீரத்தால் ஏற்படும் பெருமிதம்

- அஞ்சத்தக்கன கண்டவழி அஞ்சாமை என்கிறார் பேராசிரியர்.

- அதாவது மடலேறும் தலைவன், “ யான் போர்க்களத்தில் வலிய யானை மேல் ஏறிப் போர் செய்ய வல்லவன் என்று கூறுவது அவன் தறுகண்மை பற்றிய பெருமிதத்துக்கு எடுத்துக்காட்டு என்கிறார்.

**புகழ் -** ‘புகழ்’ என்கிற பாடத்திற்குப் பதிலாக ‘இசைமை’ என்ற பாடத்தைப் பயன்படுத்துகிறார் பேராசிரியர்.

- "இசைமையாவது: அறத்தாறொழுகும் நன்னடையானும் அருள் முதலாய உயர் பண்பானும் உலகுடன் பெறினும் பழியொரு வருவன புரியா நெறியானும் ஊராண்மை முதலிய ஒப்புரவானும் கைம்மாறு கருதாத ஈகையானும் வரும் ஒளி" என்கிறார் (தொல். மெய். 9) பேராசிரியர்.

- இவை நான்கும் பிறனொருவனின் மிகுத்தவழி பிறக்கும் மகிழ்ச்சி பெருமிதம்.

அதாவது, - இன்பமும் பொருளும் மிகுதியாகக் விட்டுவன ஆயினும் பழியைத் தரும் செயல்களைச் செய்யாமை. அதன் வழி ஏற்படும் பெருமிதம்.

**கொடை** - வரையாது வழங்கும் வன்மை.

- உடம்பும் உறுப்பும் உயிரும் போல்வன எல்லாப் பொருளும் கொடுத்தல்.

"தன்னை அடைக்கலமாக வந்தடைந்த புறாவைக் காப்பதற்காகத் துலைத்தட்டில் சிபி மன்னன் ஏறிய செயல் போல்வன" என்று இதற்கு எடுத்துக் காட்டுகிறார் பேராசிரியர்.

- இவை நான்கு பெருமித உணர்வுகளும் தன்கண் தோன்றிய பொருள் பற்றி பிறக்கும் மெய்ப்பாடுகளாகும்.

**வெகுளி** (கோபம் – மிகுசினம்)

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே (10)

**தண்டியலங்காரம்;**

கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையாவேரா வெகுண்டெழுந்தான் - வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர்வேந்தன் தூதிசைத்த போது

**கூத்த நூல்,**

திறலவி நயத்தைச் செப்புங் காலை
கையவை பிசைதல் மெய்யது குலைதல்
வாய்மடிப் புறுதல் பற்கடிப் புறுதல்
வெய் துயிர்த்திடுதல் வெகுளிதைத் திடுதல்
கண்சிவப் புறுதல் கருவிழி பிதுங்கல்
வெட வெடப் புறலென விளம்பினர் புலவர்

**நாடகவியல்,**

வெகுளி யவிநயம் விளம்புங் காலைப்
பிசைந்த கையுநட குலைந்த மெய்யு
மடித்த வாயுங் கடித்த விதழுஞ்

சிவந்த கண்ணும் வெய்ய புயிர்ப்பு
மிக்க வேர்வு புடைத்தாம் (247).

வெகுளியின் அபிநயங்களாக, "கைகளைப் பிசைதலும் மெய் குலைதலும் மடித்த வாயும் கடித்த உதடும் சிவந்த கண்ணும் வெம்மையான பெருமூச்சும் வியர்த்தலும் போன்றவை" மேலும், "உறுப்புகளை வெட்டிக் குறைத்தலும், தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் போன்றவற்றிற்குக் கேடு நினைத்தலும் மன்னனது கொடுங்கோலும் போன்ற அநியாயச் செயல் காரணமாக சினம் மிகுந்து, தன் நிலையை மறந்து கொதித்தெழுந்து கூறும் சொற்களும் செய்யும் செயல்களும் இச்சுவையின் பாற்படும்" என்கிறது நாடகவியல் (481).

**உறுப்பறை**

- அங்கமாயினவற்றை அறுத்தல் என்று இளம்பூரணரும்

- கை குறைத்தலும் கால் குறைத்தலும் கண்ணை நீக்குதலும் முதலாயின என்று பேராசிரியரும்

- உறுப்பின் ஊறு என்று சோமசுந்தர பாரதியும் (மெய். 10) பொருள் கொள்கின்றனர்.

**குடிகோள்**

- தன் குடிமைக்கும் தன்னாற் புரக்கப்படும் குடிமக்களுக்கும் தீங்கிழைத்தல்

- கீழ்வாழ்வாரை நலித்தல் என்கிறார் இளம்பூரணர்.

- தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலானவற்றுக்கண் கேடு சூழ்தல் - என்கிறார் பேராசிரியர்.

சுற்றம் நலிதல் என்கிறார் சோமசுந்தர பாரதி.

**அலை**

- வைதலும் புடைத்தலும் என்கிறார் இளம்பூரணர்.

- கோல்கொண்டு அலைத்தல் முதலாயின என்கிறார் பேராசிரியர்.

“புலியால் புன்புறுத்தப்பட்ட யானை புலியொரு பொருது வென்ற பின்னும் அப்போரிடுதலை நினைத்துக் கோபம் கொண்டமை போல, அதிகமான் தன்னூர் வந்து தனக்குப் பிறந்த புதல்வனைக்

கண்டபோதும் தான் பகைவருடன் போரிட்ட செயலை நினைத்த கோபம் மாறாமல் கண் சிவந்து காணப்பட்டான்” (புறம். 100) என்பது இதற்குக் காட்டு.

**கொலை**

- கொல்லுதற்கு ஒருப்படுதல் என்கிறார் இளம்பூரணர்.

- அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல் என்கிறார் பேராசிரியர்.

நெடுஞ்செழியன் தன்னைச் “சிறுவன்” என்று பகைவர் கூறிய சொற்களை நினைத்தே வெகுளி கொண்டு அவர்களை எதிர்த்தமை (புறம். 72) கொலை பொருளாகத் தோன்றிய வெகுளி பற்றியது.

-இம்மெய்ப்பாடு இந்த நான்கு பொருள் பற்றியும் தான் பிறரைச் செய்யும் போதும் தன்னைப் பிறர் செய்யும் போதும் வெகுளி - கோபம் பிறக்கும்.

**உவகை**

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே (11)

**அடியார்க்கு நல்லார்,**

காமவவிநயங் கருதுங் காலை......
.......................................

**செயிற்றியம்,**

ஒத்த காமத் தொருவனும் ஒருத்தியும்
ஒத்த காமத் தொருவனொடு பலரும்
.........................................................

**கூத்த நூல்**

காமத் தவிநயங் கழறுங் காலை
வெள்ளிடை நோக்கும் வெறியுறு நோக்கும்
உள்ளிடை நோக்கும் உவப்புறு நோக்கும்
கடைக்கண் ணோக்கும் கவிந்த நோக்கும்
-----------------------------------------------------
புரளல் விம்மல் பொருமல் முதலாம் (சூத். 788)

**தண்டியலங்காரம்,**

திங்க ணுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்
அங்கைத் தளிர்நடுங்குஞ் சொல்லசையும் - கொங்கை
பொருகாலு மூடிப் புடைபெயருங் காலும்
இருகாலு மொக்கு மிவர்க்க

**நாடகவியல்,**

உவகைச் சுவையி னவிநய முரைப்பின்
தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
முறுவன் மூரற் சிறுநில வரும்பூது
மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே (243)

“செல்வ நுகர்ச்சியானும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து அறியும் ஐம்புலன்களால் நுகர்தலானும் மகளிரொடு புணர்தலானும் சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் உவகை பிறக்கும்” என்கிறார் இளம்பூரணர்.

**செல்வம்**

பொருட்செல்வமே அன்றி, அறுசுவை உண்டி முதலிய நுகர் பொருளும் ஆடையணி முதலாய துய்த்தற் பொருளும் கொடியும் படையும் முதலிய அரசச் செல்வமுமாம்.

“செல்வமாவது மனத்தை மகிழ்விக்கும் பொருள்களுக்குப் பொதுப் பெயர். எக்காலத்தும் பிறரை வருத்திப் பெறும் செல்வம் உவகைப் பொருள் ஆகாது” என்கிறார் சோமசுந்தர பாரதி.

**புலன்**

- கல்விப் பயனாகிய அறிவுடைமை என்கிறார் பேராசிரியர்.

- அரிய புதிய செய்திகளை ஆராய்ந்து நுட்பமுணர்ந்து மகிழ்தற்கு ஏதுவாகிய அறிவே புலன் என்பது.

- “முகைப்பதம் பார்க்கும் வண்டு போல நகைப்பதம் பார்த்துத் தலைவியின் உள்ளக்குறிப்பறிந்து அவளொடு தலைவன் கூடுதற் கண், உவகை என்னும் மெய்ப்பாட்டின் புலன் என்ற குறிப்பு உணரப்படுகிறது.



**புணர்வு**

- காமப் புணர்ச்சி முதலாயின என்கிறார் பேராசிரியர்.

- அன்பொடு புணர்ந்த இன்பத் திணை ஐந்தில் ஒத்த தலைவனும் தலைவியும் எய்தும் உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்

- ஒத்த கற்புறு காதற் கூட்டமாம் என்கிறார் சோமசுந்தர பாரதி.

“ தலைவி இரவுக் குறியிடத்து வந்து யாழ் ஒலி போல இனிய குரலில் அன்புறு சொற்கள் பேசித் தன் தொடி தலைவன் உடலில் தழும்பு படுமாறு ஆரத் தழுவிச் சென்றமையால் இரவுக் குறி நீங்கும் தலைவன் தன் மனத்திடம் பெரிதும் மகிழுமாறு கூறுதற்கண் (அகம் 142) புணர்வு பற்றிய உவகை பெறப்பட்டவாறு” என்கிறார் பேராசிரியர்.

**விளையாட்டு**

- உள்ளமொத்தாரோடு கூடிச் சோலை புக்கு விளையாடலும் குரவை முதலிய ஆடலும் வீரவிளையாட்டுமாம்.

- விளையாட்டாவது மக்கள் உளம் கனிந்து ஆடும். தீது அறியாப் பொய்தல். அஃதாவது ஓரைவகை அனைத்தையும் குறிக்கும். இஃது ஆண், பெண் இருபாலருக்கும் பொது என்கிறார் சோமசுந்தர பாரதி (தொல். மெய். 11).

மேற்சுட்டிய முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாய் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

**நடுவுநிலைமை - சமநிலை**

- இதை நடுநிலைமை மத்திமம் எனவும் சாந்தம் எனவும் சொல்வர். இதனை நிலையில்லா மெய்ப்பாடுகளில் தொல்காப்பியர் அடக்கியுள்ளார். “செஞ்சந்தனத்தைப் பூசினும் உடலைச் செதுக்கினும் பிளந்தினும் மனம் நிலைபேறு குலையாது இன்பதுன்பங்களில் செல்லாது ஒரு நிலையிலேயே இருக்கும் நிலை. அது காமம், வெகுளி, மயக்கம் நீங்கினார் கண்ணே நிகழ்வது. அது சிறுவரவு என்பதால் நிலையில்லா மெய்ப்பாடுகளுடன் சேர்த்தார் எனப்பட்டது” என்கிறார் பேராசிரியர்.

ஆக, தொல்காப்பிய மெய்ப்பாடுகளைப் பிற நூல்கள் சுட்டும் மெய்ப்பாடுகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது, மனித வாழ்வியல் சார்ந்து, அறிவியல் தன்மை கொண்டனவாகத் தொல்காப்பிய மெய்ப்பாடுகள் இயங்குவதை எளிதில் விளங்கிக் கொள்ள முடிகிறது.

## உசாத்துணை நூல்கள்

[1] மாதையன் பெ. (பதி.) பவலரேறு ச. பாலசுந்தரம் (உரை), தொல்காப்பியம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2012.

[2] சாமிநாதையார், உ.வே., சிலப்பதிகார மூலமும் அரும்தவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2013.

[3] யோகியார் சா.து.சு., கூத்தநூல், சாந்தி பிரஸ், பவழக்காரத்தெரு, சென்னை, 1968.

[4] யோகியார் சா.து.சு கூத்தநூல் (இரண்டாம் தொகுதி), ஏசியன் அச்சகம், சென்னை, 1987.

[5] இராமதேசிகன் எஸ். என்., பரதநாட்டிய சாஸ்திரம், உ.த.நி., சென்னை, 2001.

[6] பரிதிமாற்கலைஞர், நாடகவியல், உ.த.நி, சென்னை, 2014. தண்டியலங்காரம்.



**முனைவர் கோ. பழனி,** உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம். புனைப்பெயர் : ‘பழனிக்கூத்தன்’ . இவர் நாற்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், இருப்பத்தி மூன்று நூல்கள் எழுதியுள்ளார். மேலும், ‘முகங்கள்’ என்னும் நாடகக் குழுவின் இயக்குநராகச் செயல்பட்டு வருகிறார்.